**செய்திவெளியீடுஎண்:690** **நாள்:20.09.2020**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 19.9.2020 அன்று தலைமைச் செயலகத்தில், மீன்வளத்துறையின் சார்பில் இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் வட்டம், குந்துகால் கிராமத்தில் 70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள மீன் இறங்கு தளத்தை காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், மீன்வளத் துறை சார்பில் 27 கோடியே 42 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான கட்டடங்களையும், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் சார்பில் 5 கோடியே 21 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான கட்டடங்களையும் திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாட்டில் கடலோர மாவட்டங்களில் மீனவர்கள் பயனுறும் வகையில், பாக் நீரிணை பகுதியில் மீன்பிடி படகுகளின் நெரிசலை தவிர்க்கும் பொருட்டும், கடல் மீனவர்கள் தங்களது மீன்பிடி கலன்களை பாதுகாப்பாக நிறுத்துவதற்கும், படகு அணையும் தளம், T-ஜெட்டிகள் மற்றும் கடற்கரைச் சார்ந்த உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய புதிய மீன் இறங்கு தளம் இராமநாதபுரம் மாவட்டம், குந்துகால் மீனவ கிராமத்தில் அமைக்கப்படும் என்று 2017–18ஆம் ஆண்டு மீன்வளத் துறை மானியக் கோரிக்கையில் தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டது.

அதன்படி, இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் வட்டம், குந்துகால் கிராமத்தில் 70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள மீன் இறங்கு தளத்தை காணொலிக் காட்சி மூலமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள். இந்த மீன்பிடி இறங்கு தளத்தில் 528 மீட்டர் நீளத்திற்கு படகு அணையும் தளங்கள், கடலின் மைய பகுதியில் 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதன கட்டடம் கட்டப்பட்டு, 400 ஆழ்கடல் சூரைமீன் படகுகள், 100 கண்ணாடி நாரிழை படகுகள் பாதுகாப்பாக நிறுத்த வசதி செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் சுமார் 6050 மீனவர்கள் பயன்பெறுவார்கள்.

சென்னை மாவட்டம், காசிமேடு மீன்பிடி துறைமுகத்தில் 10 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள சிறிய மீன்பிடி படகு அணையும் தளம் மற்றும் மீன்விற்பனை கூடம்; திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம்,

அண்ணாமலைச்சேரி கிராமத்தில் 4 கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள மீன் இறங்கு தளம்; ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், பவானிசாகரில் 3 கோடியே 7 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைத்து மேம்படுத்தப்பட்ட தேசிய மீன் பண்ணை மற்றும் பவானிசாகரில் உள்ள புங்கார் மீன் பண்ணையில் 1 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள தூய மரபின சினை மீன்கள் உற்பத்தி மற்றும் பராமரிப்பு மையம்; சேலம் மாவட்டம், மேட்டூரில் உள்ள மீன் பண்ணையில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள தூய மரபின சினை மீன்கள் உற்பத்தி மற்றும் பராமரிப்பு மையம்; கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் வட்டம் – லால்பேட்டை மற்றும் குறிஞ்சிப்பாடி வட்டம் – அகரம் கிராமத்தில் 2 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நவீனப்படுத்தப்பட்ட அரசு மீன் பண்ணை; நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் மீன்பிடி துறைமுகத்தில் 2 கோடியே 45 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள சுற்றுச்சுவர்;

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் சார்பில், தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் 1 கோடியே 62 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இனவழிக் கால்நடை மூலிகை பொருள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் மற்றும் 90 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பெரிய பிராணிகளுக்கான உள்ளிருப்புப் பிரிவுக் கட்டடம் மற்றும் கால்நடைப் பராமரிப்பாளர் அறை; திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் 90 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பெரிய பிராணிகளுக்கான உள்ளிருப்புப் பிரிவுக் கட்டடம் மற்றும் கால்நடைப் பராமரிப்பாளர் அறை; கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர், கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரி வளாகத்தில் 1 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாணவியருக்கான கூடுதல் விடுதிக் கட்டடம்;

என மொத்தம் 102 கோடியே 63 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மீன்வளத் துறை மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்கான கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு.உடுமலை கே. ராதாகிருஷ்ணன், மாண்புமிகு வருவாய், பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல்துறை அமைச்சர் திரு.ஆர்.பி. உதயகுமார், தலைமைச் செயலாளர் திரு.க. சண்முகம், இ.ஆ.ப., கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் கே.கோபால், இ.ஆ.ப., மீன்வளத் துறை இயக்குநர் டாக்டர் கீ.சு. சமீரன், இ.ஆ.ப., தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் முனைவர் சி. பாலசந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**